

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் எம்.பி. அவர்கள், கன்னியாகுமரி மாவட்டம், முக்கடல் அணையை விரிவாக்கம் செய்வதற்காக இன்று (23.07.2016) நேரில் சென்று, முக்கடல் அணையினை பார்வையிட்டு, ஆய்வு செய்தார். தமிழ்நாடு மாநில தலைமை மீன்வளக் கூட்டுறவுத் தலைவர் திரு. எம். சேவியர் மனோகரன் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 474/2016 நாள்: 23.07.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் எம்.பி. அவர்கள், முக்கடல் அணையை விரிவாக்கம் செய்வது குறித்து இன்று (23.07.2016) நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பாக, பொதுமக்களின் அன்றாட அத்தியாவசியத்திற்கு தேவையான குடிநீரினை, தட்டுபாடின்றி வழங்கிட பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் எம்.பி. அவர்கள், கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை ஊராட்சி ஒன்றியம், முக்கடல் அணைக்கு இன்று (23.07.2016) நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

பின்னர் முக்கடல் அணை நீர்மட்டத்தினை 25 அடியிலிருந்து 30 அடியாக உயர்த்துவது குறித்தும், அணை பகுதிகளை விரிவாக்கம் செய்வது குறித்தும், நாகர்கோவில் நகராட்சியில் பெருகி வரும் மக்கள்தொகைக்கேற்ப தடையின்றி குடிநீர் வசதிகள் ஏற்படுத்திடவும், சுத்தமான குடிநீர் வழங்குவது குறித்தும், நாகர்கோவில் நகராட்சி அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

அதனை தொடர்ந்து, இன்று முக்கடல் அணையின் நீர்மட்டம் 13.10 அடி தண்ணீர் இருந்ததை பார்வையிட்டு, அணையிலிருந்து தண்ணீர் கொண்டு செல்வதை குறித்து, நாகர்கோவில் நகராட்சி அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

அப்போது அணையிலிருந்து நாளொன்றுக்கு 230 இலட்சம் லிட்டர் தண்ணீர் நாகர்கோவில் நகராட்சியில் உள்ள மூன்று சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, 11 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி (100 இலட்சம் கொள்ளளவு) மூலம், 80 ஆயிரம் வீடுகளுக்கு தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது எனவும், இறச்சகுளம், துவரங்காடு, பூதப்பாண்டி, புத்தேரி, திட்டுவிளை, நாவல்காடு, ஈசாந்திமங்கலம், அரசன்குழி, சுசீந்திரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய பகுதிகளில் உள்ள மக்களும் இதன் மூலம் பயனடைந்து வருகிறார்கள் என தெரிவிக்கப்பட்டது.

ஆய்வின் போது தமிழ்நாடு மாநில தலைமை மீன்வளக் கூட்டுறவுத் தலைவர் திரு. எம். சேவியர் மனோகரன், நாகர்கோவில் நகராட்சி ஆணையாளர் திரு. ராமமூர்த்தி, நகராட்சி பொறியாளர் திரு. சுரேஷ், கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை சங்கத்தலைவர் திரு. ச. சகாயராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. முத்துகிருஷ்ணன், திரு. ஐயப்பன், திரு. தாணுபிள்ளை, திரு. சந்திரன், திரு. ரதீஸ் ராஜ், திரு. கனகராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.